## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 127 /2017**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமர் | தொழில் | : ஓட்டல் வேலை |
| தந்தை பெயர் | : அழகுசாமி | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 63 |

தேதி 16.10.2023

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

1. நான் செஞ்சியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராஜேஷ் என்பவர் என் தம்பி மகன். கடந்த 21.08.2015 ம் தேதி இருச்சக்கர வாகனத்தில் விழுப்புரத்தில்இருந்து செஞ்சிக்கு வருவதற்காக முனுசாமி என்பவரும், ராஜேஷ் என்பவரும் வந்துகொண்டியிருந்தார்கள். அப்போது செஞ்சியில் இருந்து விழுப்புரம் நோக்கி வந்த டிராக்டர் அப்பம்பட்டு அருகே வரும்போது இருச்சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது அங்கு நின்று கொண்டியிருந்த ஒரு நபரும், இருச்சக்கர வாகனத்தில் வந்த ராஜேஷ், முனுசாமி என்பவருக்கும் விபத்தில் அடிப்பட்டது. பின்னர் ராஜேஷ் என்பவர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்த நிலையில் மருத்துவமனையில் இறந்துவிட்டார். மேற்படி விபத்தில் காயம்பட்ட 2 நபர்களையும் பாண்டிச்சேரி ஜிக்மர் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். இறந்துபோன ராஜேஷ் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த சடலத்தை கொடுத்தார்கள். டிராக்டரை தாருமாறாக ஓட்டி வந்ததனால் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

**2.** விபத்து நடந்த இடத்திற்கு நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். கோணை கூட்ரோடு,. விபத்து நடந்த இடம் வெளிச்சமான பகுதி என்றால் விபத்து இரவில் நடந்தது. விபத்தின்போது நான் எங்கு இருந்தேன் என்றால் செஞ்சியில் இருந்தேன். விபத்தை நேரில் பார்க்காததால் யாருடைய கவணக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் நேரடியாக பார்க்காததால் தெரியவில்லை. விபத்து நடந்த தேதி எனக்கு எப்படி தெரியும் என்றால் என் மகன் சொன்னதின் பேரில் கையில் எழுதி வைத்துகொண்டேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.